DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No. 250/2025**

Prosecution **PW.7**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திரு.மாரிமுத்து | கிராமம் : | |
| தந்தைபெயர் : | கரியான் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.03.2026

எதிரி ஆஜரரில்லை. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம்வட்டம் குளித்தலை காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 18.01.2022 ம் தேதி லாலாப்பேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில இருந்த போது திருச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்க உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த மணி என்பவர் பேச முடியாத நிலையில் இருந்த அவருக்கு உதவியாக அவரது மனைவி தாமரை என்பவரிடமிருந்து புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து லாலாப்பேட்டை நிலையக்குற்ற எண.51/2022 இதச பிரிவுகள் 279, 337 ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**2.** பின்னிட்டு அன்றைய தினமே மாலை 15.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் வடிவேல், முருகேசன் ஆகியோர்களை விசாரித்து பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன்.( **பார்வை மகஜர் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**3.** சாட்சிகள் தாமரை, தமிழழகன், பார்திபன், சங்கர், கற்பகம், வினோத், வடிவேல், முருகேச்ன். ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு காயம்பட்டு திருச்சி GH ல் சிகிச்சை இருந்த மணி என்பவர் இறந்துவிட்டார் தகவல் கிடைத்து இவ்வழக்கின் சட்டப்பிரிவை 279, 337 இதச பிரிவிலிருநது 279, 304(ஏ) சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**4.** பின்னர் அன்றைய தினமே பகல் 11.00 மணிக்கு திருச்சி GH சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த மணி என்பவரின் பிரேதத்தை பஞ்சாயத்தார் முன்னிலையில் மற்றும் சாட்சிகள முன்னிலையில் பிரேத விசாரணை அறிக்கை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். . (**பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5. பின்னர் பிரேதத்தை இறப்பிற்கான உண்மையான காரணம் அறியும் பொருட்டு பிரேதத்தை கரூா GH க்கு மு.நி.காவலர் ரஞ்சித் என்பவர் மூலம் அனுப்பி வைத்தேன். இத்துடன் முதல் விசாரணையை முடித்து காவல் ஆய்வாளர் சுகந்தி அவர்களிடம் வழக்குக் கோப்பை ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் என்னிடம் விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

சம்பவம் நடந்த இடம் திருச்சி–கரூர் கிழமேல் ரோடு என்றால் சரிதான். அந்த ரோடு 3 கனரக வாகனங்கள் செல்லக்கூடிய அகலமான ரோடு என்றால் இரு கனரக வாகனம் செல்லக்கூடிய ரோடாகும். 3 வண்டிகள் செல்லக்கூடிய ரோடு வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய விசாரணை படி எதிரி சம்பவ இடத்தில் இருந்தாரா அல்லது தன்னுடைய இருசக்கர வாகனத்தை எடுத்துச்சென்றுவிட்டரா என்றால் அது பற்றி விசாரணையில் யாரும் சொல்லவில்லை.

2. சம்பவயிடத்திற்கும், எதிரியின் வீடான பட்டுக்கோட்டைக்கும் இடையே சுமார் 200 கி.மீ இருக்குமா என்றால் சுமாராக 150–160 கி.மீ. இருக்கும். அ.சா.1 தாமரை கொடுத்த புகாரிலும் சரி, அவரின் வாக்குமூலத்திலும் சரி எதிரியின் பெயர், விலாசம், கேட்டுத் தெரிந்து கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதற்கு பின் யாரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன் என்று சொல்லியுள்ளரா என்றால் இல்லை. அ.சா.2 தமிழழகன், அ.சா.3 பார்த்திபன் ஆகியோர்கள் என்னுடைய விசாரணையில் எதிரியின் பெயர், அப்பா பெயர், விலாசம் யாரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டதாக என்னிடம் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

3. முதல் தகவல் அறிக்கை எந்த தேதியில் பதிவு செய்தேன் என்றால் 18.01.2022ம் தேதி பதிவு செய்தேன். 01.02.2022ம் தேதி நீதிமன்றத்திற்கு அனுப்பபப்பட்டது என்றால் சரிதான். காலதாமதத்திற்கு என்ன காரணம் என்றால் நான் அடுத்த நாள் அனுப்பிவிட்டேன். நான் அடுத்த நாள் அனுப்பியதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. அ.சா.1 தாமரையிடம் புகார் வாக்குமூலம் வாங்குவதற்கு முன்பு கரூர் நாச்சிமுத்து மருத்துவமனையிலும், பின்னர் லாலாப்பேட்டை காவல் நிலையத்திலும் இந்த வழக்கு சம்பந்தமாக புகார் கொடுத்ததாக சொல்வது சரியா என்றால் சரியல்ல.

4. மேற்படி இரண்டு புகார்களும் வழக்கிற்கு சாதகமாக இல்லை என்பதால் என்னால் மறைக்கப்பட்டுவிட்டது என்றாலும் அதற்கு பின்னிட்டு வழக்கின் அ.சா.ஆ.1 தயார் செய்யப்பட்டு காலதாமதாக நீதிமன்றத்திற்க அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1, அ.சா.2, அ.சா.3 இவர்களை தவிர இந்த சம்பவத்தை யார் யார் பார்த்தார்கள் என்றால் இந்த விவரம் விசாரணையில் தெரியவந்தது என்றால் 3 பேர் மட்டும் பார்த்தாக தெரியவந்தது. புகாரிலும், எனது விசாரணையிலும் அ.சா.1ன் கணவர் ரோட்டிற்கு வடபுறம் ஆடு மேய்த்து கொண்டிருந்ததாக அ.சா.1 சொல்லவில்லை என்றால் சரிதான்.

5. அ.சா.1 முதல் 3 வரை உள்ளர்கள் விசாரணையிலும், அ.சா.1 கொடுத்த புகாரிலும் குறிப்பாக விபத்து தார்ரோட்டிலா, மண்ரோட்டிலா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.2, அ.சா.3 இருவரும் எங்கிருந்து சம்பவத்தை பார்த்தார்கள் என்று சொல்லவில்லை என்றால்சிந்தலவாடி பிரிவு ரோட்டில் இருந்து பார்த்தாக சொல்லியுள்ளார்கள் கரூர் போவதற்கு வந்ததாக சொன்னார்கள் குறிப்பாக எந்த இடத்தில் நின்று பார்த்தாக சொல்லவில்லை. குறிப்பாக இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது அ.சா.2, அ.சா.3 ஆகியவர்கள் விபத்தை பார்த்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

6. அ.சா.2 நாங்கள் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தை முந்திக்கொண்டு எதிரி அவரது வாகனத்தை வேகமாக ஓட்டிச்சொன்றார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். குறிப்பாக விபத்து லாலாப்பேட்டை பிரிவு ரோட்டிற்கு நேராக நடந்ததா அல்லது கிழக்கு பகுதியில் நடந்ததா என்றால் பிரிவு ரோட்டிற்கு தென்புறம் நடந்தது. லாலாப்பேட்டை பஸ் நிலையத்தில் இருந்து வந்ததாக அ.சா.2, அ.சா.3 எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

7. தோராய வரைபடத்தில் பெருக்கல் குறி போடப்பட்ட இடம் தான் விபத்து நடந்த இடம் என்றால் சரிதான். அந்த இடத்தின் தார் ரோட்டின் அகலம் என்ன என்று தோராய வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தோராயவரைபடத்தின் தார் ரோட்டின் தென்புற முனையில் இருந்து விபத்து நடந்த இடம் எவ்வளவு தூரம் உள்ளது குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தோராயவரைபடத்தில் வண்டி பிரேக் போட்டதற்கு டயர் மார்க் ஸ்கிப் மார்க் பற்றி குறிப்பிடவில்லை என்றால் வாகனம் நிறைய சென்றதால் அதை பற்றி குறிப்பிடவில்லை.

8. எதிரி ஓட்டி வந்த வாகனம் தெற்கு புறம் நின்று கொண்டிருந்த மணி என்பவர் மீது மோதுவதற்கான காரணம் எனது விசாரணையில் தெரியவந்ததா

என்றால் தெரியவரவில்லை. சம்பவம் நடந்த சமயத்தில் அ.சா.1 முதல் 3 பேர் அங்கில்லை வழக்கிற்காக நாங்கள் அவர்களை கண்ணுற்ற சாட்சிகளாக தயார் செய்தோம் என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடம் தார்ரோட்டின் மையப்பகுதியில் நடந்தது என்றாலும் நான் வழக்கிற்கு ஏற்ப தார்ரோட்டின் தெற்கு பகுதியில் நடைபெற்றது என பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

9. நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லைஎ ன்றாலும் இவ்வழக்கில் இறந்து போன மணி என்பவர் தோட்டத்தின் தென்புறம் தனது ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த போது அவரது ஆடு ஒன்ற திடிரென்று தார் ரோட்டின் தென்புறம் இருந்து வடபுறம் நோக்கி ஓடியது என்றாலும் அந்த ஆட்டை பிடிப்பதற்காக கிழக்கிலிருந்து எதிரி ஓட்டி வந்த வாகனத்தை கவனிக்காமல் ரோட்டின் மையப்பகுதிக்கு சென்று தானே இருசக்கர வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்திகொண்டார் என்றாலும் இறந்து போனவருக்கு இழப்பீ பெறுவதற்காக முதல்தகவல் அறிக்கை, முதல் விசாரணை மேற்கொண்டேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ
Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.23 18:15:40 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.